# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : DW-1 | Date | : 10.09.2024 |
| Case No. | : O.S. 497/2019 | Nationality | : Indian |
| Name | : கிட்டு | Religion | : |
| Father's/Husband's Name | : கிருஷ்ணமூர்த்தி | Age | : 60 |
| Village | : | | |
| Taluk | : | | |

பி.வா.சா.1

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நிரூபண வாக்குமூலத்திற்கு விவரங்கள் சொன்னது நான்தான் என்றால் சரிதான். வாதிகள் சொல்லியுள்ள கட்சியை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். தாவா ஏ பிரிவு சொத்தில் ஆஸ்பெஸ்டாஸ் போட்ட சொத்தில் வாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா ஏ பிரிவு சொத்திற்கு துரை பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா பி பிரிவு சொத்திற்கு 2ம் வாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பட்டாவினை பொய்யாக வாங்கி உள்ளார்கள். மேற்படி 2 பட்டாக்களையும் ரத்து செய்வதற்கு நான் தற்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எடுத்துள்ளேன். அவ்வாறு நடவடிக்கை எடுத்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாதிகளுக்கு சரியாக பட்டா வழங்கப்பட்டுள்ளதால்தான் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு கீழ்புறம் எனது தகப்பனார் கிருஷ்ணமூர்த்தி பெயரில் சொத்துள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை பொறுத்து தற்போது வரை பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான்.

2. எனது சகோதரர் முருகன் அடிக்கடி வெளிநாடு சென்று வருவார் என்றால் ஏற்கனவே சென்று கொண்டிருந்தார். கடந்த 2 வருடங்களாக செல்லவில்லை ஊரில்தான் இருக்கிறார். 2019 ம் ஆண்டு அவர் வெளிநாட்டில் இருந்தாரா என்றால் இருந்தார். பொதுவாக ஒரு வீட்டிற்கு வழங்கப்படும் மின் இணைப்பினை மற்றொரு வீட்டிற்கு பயன்படுத்த கூடாது என்றால் சரிதான். நான் தற்போது வேற தெருவில் குடியிருந்து வருகிறேன் என்றால் அதே தெருவில் 4 வீடு தள்ளி குடியிருந்து வருகிறேன். ரமேஷ் எங்கே குடியிருந்து வருகிறார் என்றால் தாவா சொத்திற்கு கீழ்புறம் குடியிருந்து வருகிறார். முருகன் தாவா சொத்தில் குடியிருந்து வருவதை காட்டுவதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல முருகன் தாவா சொத்தில் குடியிருந்து வரவில்லை என்றாலும் வேற இடத்தில் குடியிருந்து வருகிறார் என்றாலும் சரியல்ல. தற்போது தாவா சொத்தில் வடபுறம் துரை குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

3. நான் தாக்கல் செய்துள்ள பிசாஆ 1 முதல் பிசாஆ 4 வரையிலான ஆவணங்களில் தெரு பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிசாஆ 1 ஆவணம் 2012 ம் ஆண்டிற்கான ஆவணம் என்றாலும் மற்ற ஆவணங்கள் 2020 ம் ஆண்டிற்கு பிறகு உள்ள ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் நான் தாவா சொத்தில் மாட்டு கொட்டகை வைத்து பால் கொடுத்து வருவதாக குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. பிசாஆ 5 ஆவணம் 2023 ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிசாஆ 6 புகைப்படங்களில் கதவு எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நாளது தேதி வரை தாவா

சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய அனுபவத்தில் உள்ளது. வீடு மற்றும் மாட்டு கொட்டகையை வாதியிடம் இருந்து பெற்றுத் தர வேண்டும் என்று நீதிமன்றத்திடம் கேட்கிறேன் என்றால் சரிதான்.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.